அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

அகநானூறு: குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்

Akananooru: Life of Kurinjinila People

த.கல்பனா, *(Ref. No. BDU2210632780170),*

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, டாக்டர் நல்லி குப்புசாமி கலைக் கல்லூரி, தஞ்சாவூர் — 613 003, தமிழ்நாடு, இந்தியா. (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது)

T. KALPANA, *Ph.D. Research Scholar, Department of Tamil,*

Dr. Nalli Kuppusamy Arts College, Thanjavur-613 003, Tamilnadu, India.

(Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)

ORCid: https://orcid.org/0009-0009-1192-0439

முனைவர் இரா.திலகா, உதவிப் பேராசிரியர் - ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, டாக்டர் நல்லி குப்புசாமி கலைக் கல்லூரி, தஞ்சாவூர் — 613 003, தமிழ்நாடு, இந்தியா.

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது)

Dr. R. THILAGA, *Research Supervisor, Assistant Professor, Department of Tamil,*

Dr. Nalli Kuppusamy Arts College, Thanjavur-613 003, Tamilnadu, India.

(Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)

ORCid: https://orcid.org/0009-0005-2315-6715

Abstract

The Sangha Literatures are the treasury and foundation of Tamil literature. The Sanga literatures are tenfold and eightfold. It is a historical document that records the life style, civilization, culture, thoughts, religion and faith of the Tamils who lived two thousand years ago. Early epithets, biographical messages, and internal messages that appear in Sangha literature are tools to show time. The Sangha literature not only of the people of that time but also of the future people of all ages has been studied with its contents.

Literature contributes a lot to understanding the origin of a society and its development. The contribution of literature to the knowledge of the life styles of Tamils is commendable. Sangha literature, which is praised as a reflection of biographical messages, is divided into eight and ten. One of the five internal scriptures contained in the octet is Agananhun. Among the Sangam hymns, Batuppattu, eight hundred and eighty are outstanding. There are four hundred hymns on the Self, but the Aganhund is special. This book consists of five sections namely Kurinji, Mullai, Marutham, Neithal and Balai. Among them only the index is limited to this article. In this article, 'Akananooru: Life of the Kurinjinila People', the profession, lifestyle, marriage patterns, customs and beliefs of the people are explained.

Keywords: *Kurinji, Life, Accessories, Hospitality, Worship, Faith*

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியத்தின் கருவூலமாகவும் ஆணிவேராகவும் விளங்குபவை சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியங்களாவன பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, சிந்தனைகள், சமயம், நம்பிக்கை போன்றவற்றைப் பதிவு செய்து வைத்துள்ள வரலாற்று ஆவணமாகும். சங்க இலக்கியத்தில் இடம்பெறும் முதல், கரு உரிப்பொருள்கள், வாழ்வியல் செய்திகள், அகச் செய்திகள் காலத்தைக் காட்டும் கருவியாக உள்ளது. சங்க இலக்கியம் அக்கால மக்கள் மட்டுமல்லாமல் எதிர்வரும் அனைத்துக்கால மக்களின் வாழ்க்கைக் கூறுகளை உள்ளடக்கங்களாகக் கொண்டு பாடப் பெற்றிருக்கும்.

ஒரு சமூகத்தின் தோற்றத்தையும், அதன் வளர்ச்சியையும் அறிந்து கொள்வதற்கு இலக்கியங்கள் பெருந்துணைப் புரிகின்றன. தமிழர்களின் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்வதற்கு துணையாக இருக்கும் இலக்கியங்களின் பங்கு போற்றுதலுக்குரியது. வாழ்வியல் செய்திகளைப் பிரதிபலிப்பாகப் போற்றபப்டும் சங்க இலக்கியத்தை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இரண்டாகப் பகுத்துள்ளனர். எட்டுத்தொகையில் இடம்பெற்றிருக்கும் ஐந்து அக நூல்களில் ஒன்று அகநானூறு. சங்கப் பாடல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில் அகநானூறு தனிச்சிறப்புடையது. அகம் பற்றி நானூறு பாடல்களைக் கொண்ட நூல்கள் இருப்பினும் அகநானூறு சிறப்புடையதாகத் திகழ்கிறது. இந்நூல் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் குறிஞ்சித்திணையை மட்டும் இக்கட்டுரை எல்லையாகக் கொண்டுள்ளது. 'அகநானூறு: குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல்' என்னும் இக்கட்டுரையில் அம்மக்களின் தொழில், வாழ்க்கை முறைகளையும், திருமண முறைகளையும், பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகள் போன்றவற்றையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

கருவிச்சொற்கள்: குறிஞ்சி, வாழ்வியல், அணிகலன்கள், விருந்தோம்பல், வழிபாடு, நம்பிக்கை

முன்னுரை

சமுதாய வாழ்க்கையில் இருந்து குழு வாழ்க்கைக்கு வளர்ச்சி அடைந்த பழந்தமிழர் சிறந்த நாகரிகம், பண்பாடு பெற்ற மக்களாக வாழ்ந்துள்ளனர். அகப்புற வாழ்க்கைக்குச் சில நெறிகளை வகுத்துக் கொண்டு வாழ்ந்து இருக்கின்றனர். பழந்தமிழர் வாழ்வில் அகவாழ்வு களவு, கற்பென இரு வகையில் பகுக்கப் பெற்றுள்ளது. தமிழர்தம் அக வாழ்விற்கு அன்பு அடிப்படைக் காரணமாகப் போற்றப் பெறுகின்றது. பல்வேறு குணநலன்கள் ஒத்த தலைவனும் தலைவியும் களவு, கற்பென இரு வகையில் பகுக்கப் பெற்றுள்ளது. தமிழர்தம் அக வாழ்விற்கு அன்பு அடிப்படைக் காரணமாகப் போற்றப் பெறுகின்றது. பல்வேறு குணநலன்கள் ஒத்த தலைவனும் தலைவியும் களவு, கற்பு வாழ்க்கையில் கூடி மகிழ்ந்து வாழ்ந்ததை அறிய முடிகிறது.

ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தோடு தொடர்பு கொண்டு வாழ்ந்து வருகின்றான். அவ்வாறு வாழ்ந்து வரும் மனிதன் தனக்கென சில வரைமுறைகளை வகுத்துக் கொண்டு வாழத் தொடங்கியுள்ளான். இதன் காரணமாக சங்ககால மனிதன் சமுதாயத்தில் அகம், புறம் என்னும் இரு வகையான வாழ்க்கைக் கூறுகள் பின்பற்றப்பட்டது. இவற்றுள் அக வாழ்வு மனித சமுதாயத்தில் மிகச் சிறப்பாக போற்றப்பட்டுள்ளதை சங்க இலக்கியங்களின்வழி அறியமுடிகிறது.

பண்டைய தமிழர் காதலையும் வீரத்தையும் இருகண்களாகக் கருதி வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்தால் மிகுதியாக ஈர்க்கப்பட்டு அதிகமாகக் குறிஞ்சியைப் பாடிய புலவர் கபிலர். குறிஞ்சி நிலத்தையும், மக்களையும், ஏனைய உயிரினங்களையும், இயற்கையையும் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தியுள்ளார். அகநானூற்று குறிஞ்சில மக்களின் வாழ்வியல் எனும் இக்கட்டுரையில்

அம்மக்களின் தொழில், வாழ்க்கை முறைகளையும், திருமண முறைகளையும், பழக்கவழக்கம், நம்பிக்கைகள் போன்றவற்றையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

அணிகலன்கள்

ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தையும், வளர்ச்சியையும் காட்டுவன அணிகலன்கள், தொடக்ககாலத்தில் இயற்கைப் பொருள்களாகிய தாவரங்களையும், செடி கொடிகளையும், மலர்களையும் ஆபரணம் போன்று அணிந்தனர். காதில் தளிரை அணிந்தனர். அதனைக் குழை என்று கூறினர். காதில் பூ இதழ்களை அணிந்தனர். பூ இதழ்களை தோடு என்று கூறுகின்றோம். காதில் பூ இதழ்களை அணிந்தனர். பூ இதழ்களை தோடு என்று கூறுகின்றோம். தாழ் என்றால் விதை என்று பொருள். பின்பு காழ் என்பது மணிகளைக் குறித்தது. அதனை மேகலை என்று கூறினர். நாம் இன்று நகைகள் என்று கூறுவதை பழங்காலத்தில் அணி, புண், இழை, கலம் என்ற பல பெயர்களால் அழைத்துள்ளனர்.

இழை

தலைவி தலைவனை நினைத்து வருந்துகின்ற காரணத்தினால் தலைவியின் மேனி மாறுபட்டு காணப்படுகிறது. அதனால் தலைவியின் கைவளையல்கள் நெகிழ்ந்து காணப்படுகிறது. மேலும் தலைவியை ஊரார்கள் அலர் து]ற்றும் செய்தியை,

ஆய்மலர் மழைக்கண் தெண்பணி உறைப்பவும்

வேய்மருள் பணைத்தோள் விறல் இழை நெகிழவும்

அம்பல் மூதூர் அரவம் ஆயினும் (அகம்.38)

எனும் பாடல்வழி மூலம் அறியமுடிகின்றது. மேலும் தலைவி அழகிய அணிகலன்களை அணிந்திருப்பாள். மெலிந்த இடையையும், மெல்லிய சாயலையும் உடையவள் தலைவி, தலைவனைக் காணாது பசலை நோயின் காரணமாக அணிகலன்களை அணியாமல் உடல் மெலிந்து காணப்படுவதை,

மருங்கு மறைத்த திருங்து இழைப்பணைத்தோள்

நல்கூர் நுசுப்பின் மெல்இயல் குறுமகள்

பூண்தாழ் ஆகம் நாண்ட வருந்திய (ஐங்குறுநூறு, பா.152)

எனும் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

குழை

முருகன் காதில் குழை அணிந்திருந்தான் என்பதை,

நகைதாழ்பு துயில்வருஉம் வகை அமைபொலங்குழை (அகம்.182)

எனும் வழி உணர்த்துகிறது. விறலி பொலிவுடன் ஆடுகின்ற காதணியை அணிந்திருக்கும் செய்தியை,

பூங்குழை உசல் பொறைசால் காதின் (நற்றிணை, பா.18)

எனும் அடிகளின்வழி அறியமுடிகிறது.

தங்கள் உடலுக்கு ஏற்ற அணிகலன்களை அணிந்தப் பெண்டிர் செவ்விய தினையை உலத்திய பின் சுனையில் பாய்ந்து நீராடுவதற்குச் சென்றனர் என்பதை,

நிரைவளை முன்கை நேர்இழை மகளிர்

இருங்கல் வியல் அறைச் செந்தினை பரப்பி (அகம்.108)

மகளிர் சுனையில் நீராடும்போது, தம் காதணிகளைக் கழற்றி வைத்துவிட்டு நீராடுகின்றனர். அக்காதணியை மீன் கொத்திப் பறவை தனக்கு உணவு எனக் கருதிக் கொத்திச் சென்று விடுகிறது. இதனால் காதணி மீன் போன்ற வடிவில் செய்யப் பெற்றுள்ளது என்பதை,

புனல் ஆடு மகளிர் இட்ட பொலங்குழை

இரைதேர் மணிச்சரல் இரைசெத்து ஏறிந்தென

புள்ஆர் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது

கேள்வித் தூணத்து அசைஇ யவணர் (நற்றிணை, பா.22)

எனும் பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

கழங்கிட்டுப் பார்த்தல்

சுழற்றிக் காய்களைக் கொண்டு பெண்கள் ஆடும் விளையாட்டு கழங்காடல் எனப்படும். மணல் பரப்பில் முற்றத்தை தூய்மை செய்து கழங்கிட்டுக் குறி பார்த்தலை உடைய பூசாரியை வீட்டிற்கு அழைத்து வந்து குறிக்கேட்டுள்ளனர். இச்செய்தியை,

பெய்ம்மணல் முற்றம் கடி கொண்டு

மெய்ம்மலி கழங்கின் வேலற் தந்தே (அகம்.222)

எனும் பாடலின் வரி வாயிலாக அறியமுடிகிறது. தலைவியின் நெற்றியில் பசலை நோய் காணப்பட்டது. இது தலைவனால் வந்தது என்று தெரியாத அன்னை வேலனை அழைத்து, கழங்கிட்டுக் குறிபார்த்து முருகனை வணங்கிப் பலியிட்டால் இந்நோய் நீங்கும் என்று வேலன் கூறியதை,

காதலின் தந்தமை அறியாது உணர்ந்த

அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன் (குறுந்தொகை, பா.718)

எனும் அடி உணர்த்துகிறது. இதனை வேலன் மட்டும் நிகழ்த்தியதாகத் தெரிகின்றது. களவுக் காலத்தில் தலைவியின் மாறுபாட்டிற்குரிய காரணத்தை, அறிந்துக் கொள்வதற்காக வேலனிடம் அழைத்துச் செல்லும் செய்தியை,

பெய்ம்மணல் வரைப்பில் கழங்குபடுத்து அன்னைக்கு

முருகென மொழியும் வேலன் மற்றவன்

வழிய இலங்கும் அருவிச்

சூர்மலை நாடனை அறியாதோனே (ஐங்குறுநூறு, பா.29)

எனும் ஐங்குறுநூற்றுப் பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

விருந்தோம்பல்

சங்க கால மக்கள் விருந்தோம்பல் பண்புகளில் மிகவும் சிறந்து விளங்கினர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. அவர்களுடைய பழக்கவழக்கங்களும் போற்றுதற்குரியதாக சிறந்து விளங்குகிறது. பண்பாட்டைப் போற்றி வாழ்ந்தவர்கள் பண்டையத் தமிழர்கள் அவர்கள் போற்றியப் பண்புகளில் தலைமைப் பண்பு விருந்தோம்பலாகும். விருந்தின் மேன்மையை, பழங்கால மக்கள் தங்களை நாடி வருபவர்களுக்குப் பல பண்டங்களைச் செய்துக் கொடுத்தும், சுவைமிக்கச் சோறு போன்ற பல உணவைப் பிறருக்குக் கொடுத்தும் உபசரித்தனர் என்பதை,

பண்ணியம் அட்டியும் பசுபதங் கொடுத்தும்

புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை (அகம்.72)

எனும் அடிகள் உணர்த்துகின்றது.

பழங்கால மக்களின் பண்பாடுகளுள் ஒன்று விருந்தோம்பல் பண்பு ஆகும். அம்மக்கள் சுவைமிக்க உணவுப் பொருள்களைச் சமைப்பதில் கைதேர்ந்தவர்களாக இருந்துள்ளனர் என்பதை,

இருந்தோம்பி இல்வாழ் தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு (குறள்.1273)

என்ற குறளின் மூலம் இல்வாழ்வில் விருந்தினரைப் போற்றி ஒழுகுதலும் உதவுவதும் இல்வாழ்வானின் கடமை என்று கூறுகின்றார் வள்ளுவர்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து (குறள்.1002)

என்ற குறட்பாவில் விருந்தினர் அனிச்சமலர் போன்று மென்மைத் தன்மையுடையவர். அனிச்சம் மலரை முகர்ந்தால் வாடிவிடும். அதுபோல விருந்தினரின் முன் சிறிது முகம் சுழித்தாலும் அவர்களின் முகம் வாடிவிடும் என்பதை திருவள்ளுவர் விருந்தோம்பல் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

உடை

மனிதனுக்கு இன்றியமையாத ஒன்று உடை என்பதாகும். இன்று உலகம் முழுவதும் ஆடை வகைகள் மிகுதியாக உள்ளன. எத்தனையோ வண்ண ஆடைகள் நு]லில் இருந்து செய்யப்பெற்ற ஆடைகள் முன்பு இருந்தன. இப்போது பிளாஸ்டிக்கிலிருந்து கூட ஆடைகளைத் தயாரிக்கின்றனர். அறிவியல் வளர வளர ஆடையில் புதுமையும் வளர்கிறது. இன்றுகூட உலகத்தில் சில பகுதிகளில் குறைந்த ஆடையுடைய மலைநாட்டு மக்கள் வாழ்கின்றனர்.

சங்க காலத்தில் மக்கள் எவ்வாறு ஆடை அணிந்தனர் என்பதை குறிஞ்சி நிலத் தலைவன், தலைவிக்கு பரிசாகக் கொடுக்கும் ஆடையைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

உடுக்கும் தழை தந்தனளே யாம் அஃது

உடுப்பின் யாய் அஞ்சுதுமே கொடுப்பின்

கேளுடைக் கேடு அஞ்சுதுமே ஆயிடை

வாடல கொல்லோதாமே ஆயிடை

போருடை வருடையும் பாயா

சூருடை அடுக்கத்த கொயற்கு அருந்தழையே (அகம்.132)

எனும் பாடலில் மலையில் மேய்ந்த பசு காந்தள் மலர்க் கொத்துகளைத் தீண்டி, அதன் பூந்தாதுகள் அதன் மேல் உதிர்ந்தன. அதனால் உடல் மாறுபாட்டைக் கொண்ட பசு வீடு திரும்ப, அதன் கன்று தன் தாய் பசுதானா என்று ஐயம் கொள்கிறது. அத்தகைய மலைநாட்டுக்குரியத் தலைவன் தழை ஆடையைப் பரிசாகத் தந்தான். அதனை நான் உடுத்தினால் எவ்வாறு கிடைத்தது என்று தாய் கோபம் கொள்வாள். அவ்வுடையை வாங்காமல் தலைவனிடமே கொடுத்தால் தலைவன் துயரமடைவான் என்று தலைவி கூறும் செய்தியை அறியமுடிகிறது.

சங்க காலத்தில் தழைகளை ஆடையாக உடுத்தும் மரபு இருந்துள்ளது. குறிஞ்சிப்பாட்டில் தலைவி தழையாடை உடுத்தியதைக் கபிலர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

பைவிரி அல்குல் கொய்தழை தைஇப்

பல்வேறு உருவின் வனப்புஅமை கோதைஎம்

மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி (திருமுருகாற்றுப்படை, பா.9)

அடிவயிற்றை மறைப்பதற்காகத் தலைவி தழை ஆடையை அணிந்தாள் என்பது தெரிகிறது. திருமுருகாற்றுப்படையில் குறமகள் தழையாடை உடுத்தியதை,

முடித்த குல்லை இலையுடைய நறும்பூ

செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு

சுருர்பு உணர் அல்குல் திளைப்ப உட்இ

மயில்கண் டன்ன மடநடை மகளிரோடு (திருமுருகாற்றுப்படை, பா.10)

எனும் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றது.

சங்க காலத்தில் மக்கள் இலைகள், மலர்கள், தழைகள், மரப்பட்டைகள் ஆகியவற்றை ஆடையாக அணிந்துள்ளனர். பட்டினப்பாலையில் மகளிர் இரவு நேரத்தில் பட்டு ஆடையை நீக்கிவிட்டு மெல்லிய இழையை உடைய ஆடையை அணிந்தனர் என்பதை,

பட்டு நீக்கித் துகில் உடுத்தும் (குறுந்தொகை, பா.867)

எனும் அடி உணர்த்துகிறது.

வழிபாடு

ஆதிமனிதன் இயற்கைச் சீற்றத்திடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், நோய் நொடிகளிலிருந்து விடுபடவும் தெய்வங்களை வழிப்பட்டுள்ளனர். குறமகள் குறிஞ்சி நிலத் தெய்வமான முருகனுக்கு பலி கொடுத்தும், நறுமணமும் ஈரமும் பொருந்திய காந்தள் மலரினைத் தூவியும் வழிப்பட்டுள்ளனர்.

குன்ற வேவிச் சிறுகுடி ஆங்கண்

மன்ற வேங்கை மணநாட் பூத்த

மணிஏர் அருமபின் பொன்வீ தாஅய்

வியல்அறை விரிக்கம் முன்றில் குறவர்

மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும்

ஆர்கலி விழவுக் களம் கடுப்ப, நாளும்,

விரவும்பூம் பலியொடு வரைஇ, (அகம்.322)

என்னும் பாடலின் மூலம் வேங்கை மரத்தில் உள்ள பூக்களைப் பறித்து குறவர்களின் தெய்வமான முருகனுக்கு மாலை அணிவித்து வழிபட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது. இதே செய்தி பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடலிலும் இடம்பெற்றுள்ளதை,

குன்றக் குறவன் காதல் மடமகள்

மன்ற வேங்கை மலர் சில கொண்டு

மலைஉறை கடவுள் குலமுதல் வழுத்தி

தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையன்

மலர்ந்த காந்தள் நாறுக்

கவிழ்ந்த கண்ணன் - எம் அணங்குயோளே (ஐங்குறுநூறு, பா.151)

எனும் அடிகளின்வழி அறியமுடிகிறது.

மழைக்கான அறிகுறி

குறிஞ்சி நில மக்கள் மயில் நடனம் ஆடுவதைக் கண்டு மழைவரப் போகிறது என்று அறிந்திருந்தனர். இடியும் மின்னலும் வருவதற்கு முன்பு கருமேகத்தைக் கண்டு மயில் நடனம் ஆடுகிறது. அதனைக் கண்ட அம்மக்கள் மழை வரும் என்பதை உறுதி செய்தனர்.

மழை வரவறியா மஞ்ஞை யாலும்

அடுக்க னல்லா ரசைநடைக் கொடிச்சி (அகம்.298)

எனும் அடிகளில் கானவர்கள் மழை வருவதன் அறிகுறியை அறிந்து மயில் நடனம் ஆடும் செய்தியை அறியமுடிகிறது. இதே செய்தி நற்றிணையில் இடம்பெற்றுளதை பின்வரும் அடி உணர்த்துகிறது.

சேணுதற் தோன்றுங் குன்றத்துக் கவாஅன்

பெயலுழுந்து உலறிய மணிப்பொறிக் குடுமிப்

பீலி மஞ்ஞை ஆலுஞ் சோலை (நற்றிணை, பா.28)

என்ற அடியின் மூலம் கருமேகத்தைக் கண்டவுடன் சோலையில் மயில்கள் தோகை விரிந்து ஆடிய நிகழ்வை வெளிப்படுத்துகிறது.

நம்பிக்கை

இன்றளவும் மக்களிடம் நிமித்தம் காணும் வழக்கம் இருந்து வருகிறது. பெண்களுக்கு இடது கண் துடித்தால் நன்நிமித்தம் என்பது தமிழர்களின் நம்பிக்கை. தலைவனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த தலைவிக்கு இடதுகண் துடிக்கிற செய்தியை,

பூங்கண் இடமாடும் களவும் திருந்தின (அகம்.142)

எனும் பாடலின் மூலம் பெண்களுக்கு இடது கண்ணானது துடித்தால் நம்மை ஏற்படும் என்ற நம்பிக்கை இருந்ததை அறியமுடிகிறது.

கண்ணகி கருங்

மனையிற் பல்லியும் பாங்குகடுத்து இசைத்தன

நல்லெழில் உண்கஹம் ஆடுமால் இடனே (கலித்தொகை, பா.152)

எனும் கலித்தொகை பாடலின் மூலம் பெண்களுக்கு இடது கண்கள் துடித்தால் நன்மை ஏற்படும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்து வந்துள்ளமையை அறியமுடிகிறது.

இன்றயளவும் மக்களிடம் நிமித்தம் காஹம் நம்பிக்கை பரவலாக காணப்படுகிறது. பெண்களுக்கு இடது கண்ணும், ஆண்களுக்கு வலது கண்ணும் துடித்தால் நன்மை உண்டாகும் என்பது தமிழர்களின் நம்பிக்கையாக இருந்தது. தலைவன் வரவைக் குறிப்பதாக இடதுகண் துடிக்கிறது.

நுண்ணோர் புருவந்த கண்ணும் ஆடும்

மயில்வார் முன்கை வளையும் செறுூஉம்

எழுதரு மழையின் குழும்

பெருங்கல் நாடன் வருங்கொல்? அன்னாய் (ஐங்குறுநூறு, பா.148)

என்ற அடிகளின் மூலம் பெண்களின் இடதுகண் துடித்தால் நன்மைகள் ஏற்படும் என்ற எண்ணம் பண்டைய தமிழ் மக்களிடம் இருந்து வந்துள்ளமையை அறிய முடிகிறது. இதனை,

மலையிற் பல்லியும் பாங்கெடுத்து இசைத்தன

நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே (குறுந்தொகை, பா.88)

எனும் பாடல்வழி உணர்த்துகிறது.

முருக வழிபாடு

அழகும் ஆற்றலும் பற்றிக் பேசப்படும் இடங்களில் எல்லாம் முருகனைப் பற்றிய பேச்சு சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளமையைக் காண்கிறோம். சங்க இலக்கியங்கள் அவனை "சேயோன்" எனக் குறிப்பிடுகிறது. போர்த்திறன் கொண்ட அவன் போர்த் தெய்வமாகிய கொற்றவைக்கு மகனாகத் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்படுகிறான். தலைவி காதல் நோயுற்ற சூழலில் நடைபெறும் வெறியாட்டு முருகனை முன்னிறுத்தி நடைபெறுவதாகும். இம்முருக வழிபாட்டில் ஆரவாரம் மிக்க ஆடல்களும் பாடல்களும் சிறந்து விளங்கின.

குறிஞ்சி நில மக்கள் மலையில் வாழ்பவர்கள். இவர்கள் முருகனை தெய்வமாக வணங்கியுள்ளதை,

கார் நறுங் கடம்பின் கண்ணிசூடி

வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்

கடவுள் ஆயினும் ஆக

மடவை மன்ற வாழிய முருகே (அகம்.48)

எனும் அடிகள் உணர்த்துகிறது. இதே செய்தி ஐங்குறுநூற்றிலும் இடம்பெற்றுள்ளமையை,

பெய்ம்மணல் வரைப்பிற் கழங்குபடுத் தன்னைக்கு

முருகென மொழியும் வேலன் மற்றவன்

வாழிய விலங்கு மருவிச்

சூர்மலை நாடனை அறியாதோனே (ஐங்குறுநூறு, பா.70)

எனும் பாடலால் அறியமுடிகின்றது.

ஆதிமனிதன் இயற்கைச் சீற்றத்திடமிருந்து தன்னைப் பாதுகாக்க இறைவனை வழிப்பட்டுள்ளான். நோய் நொடிகளிலிருந்து விடுபடவும் தெய்வங்களை வழிபட்டுள்ளனர். குறவன் மகள் மலையை உறைவிடமாகக் கொண்ட குலத்தெய்வமான முருகவேலுக்கு பலிக் கொடுத்தும் நறுமணமும் ஈரமும பொருந்திய காந்தள் மலரினைத் தூவியும் வழிபட்டுள்ள நிகழ்வை,

குன்றக் குறவன் காதல் மடமகள்

மன்ற வேங்கை மலர் சில கொண்டு

மலை உறை கடவுள் குல முதல் வழுத்தி

தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையள்

மலர்ந்த காந்தள் நாறிக்

கவிழ்ந்த கண்ணன் - எம் அணங்குயோளே (அகம்.78)

எனும் பாடல் வழி அறியமுடிகிறது.

கொடிச்சியர் கூப்பி வரைதொடு கைபோல்

எடுத்த நறுவின் குலையலம் காந்தள் (கலித்தொகை, பா.140)

என்ற கலித்தொகை பாடலில் கொடிச்சியர் மலையுறை தெய்வத்தை வணங்குவதை இதன் மூலம் காணலாம்.

தலைவியின் ஊர் மக்கள் தெய்வத்தை வணங்கினார்கள் என்பதை,

தாமரைக் கண்ணியைத் தண்நறும் சாந்தினை,

மணம்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபொறூஉம்

அணங்கு என அஞ்சுவர் (கலித்தொகை, பா.13)

எனும் பாடல் உணர்த்துகிறது. மேலும் இப்பாடல் குறிஞ்சி நில மக்கள் தெய்வமானது பலியை ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்தனர் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

பல்லி சொல் கேட்டல்

தினைப்புனம் மேயச் செல்லும் பன்றி இடையே பல்லி ஒலித்தலைக் கேட்டு, அதனைத் தீய நிமித்தமாகக் கருதி மேற்சொல்லாமல் மீண்டது என்றொரு கருத்தினை,

எம்முள் அன்ன படூஉ மயிர் எருத்தின்

செய்யும் மேவல் சிறுகட் பன்றி

ஓங்குமலை வியன்புனம் படிஇயர் வீங்குபொறி

நூழை நுழையும் பொழுதில் தாழாது

பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென

மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து தன்

கல்லளைப் பல்லி வதியும் நாடன் (அகம்.52)

என்ற பாடலின் வழி அறியமுடிகிறது. பல்லி ஒலித்தலைத் தீ நிமிததமாகக் கருதி பன்றி செல்லாமல் மீண்டது போலத் தலைவியின் நலன் துய்க்கப் பெறாது பதியிடம் பெயர்ந்தான் என்னும் உள்ளுறையினை உணர்த்துவதோடு, அக்காலத் தமிழர்களிடையே நிலவிய நிமித்தங்களை அறியமுடிகிறது.

இளமை பொருந்திய காட்டுப் பன்றியானது, உயர்ந்து வளைந்த பெரிய நெற்கதிரை உண்பதற்காகப் பிளந்த வாயினையுடைய பல்லி பக்கத்தில் இருந்து ஒலிக்கும் சத்தத்தை நிமித்தம் என உணர்ந்த காட்டுப் பன்றியானது கொல்லையினை அஹகி வரும் என்ற செய்தியை,

பகுவாய்ப் பல்லி பாடுஒர்த்துக் குறுகும்

புருலைப் பன்றி வருதிறம் நோக்கி (நற்றிணை, பா.728)

என்ற நற்றிணைப் பாடல் விளக்குகின்றது.

கொடுமையுடைய காட்டு வழியில் தலைவன் சென்றாலும் அங்கு யானை, புறா, மான் ஆகியவை தமது காதலியை அன்புடன் பேஹவதைக் காஹம் தலைவன் விரைவில் திரும்பி வருவார். நான் செல்வதை அனுமதிப்பது போல பல்லியும் ஒலி செய்கிறது என்ற செய்தியை,

இனைநலம் உடைய கானம் சென்றோர்

புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்

பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன (கலித்தொகை, பா.89)

எனும் கலித்தொகைப் பாடல் வழி அறியமுடிகிறது. பல்லி சத்தம் எழுப்பினாலும் நன்மை ஏற்படும என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்து வந்துள்ளமையை அறியமுடிகிறது.

ஆந்தை அலறல்

சங்ககால மக்கள் வாழ்கின்ற பலரும் நீருண்ஹம் துறையில் பெருங்கடவுள் தங்கியுறையும் பழைய மரம் ஒன்று இருந்துள்ளது. அம்மரத்தின் மீதிருந்து தேயாத வளைந்த வாயுடனும், எங்களுடன் பழகியுறையும் வலிமை மிகுந்த கூகையானது வாயாகிய பறையை ஒலித்து பிறரை வருத்துகிறது என்பதை,

எம் ஊர் வாயில் உண்துறைத் தடைஇய

கடவுள் முதுமரத்து உடனுறை பழகிய

தேயா வளைவாய் தெண்கண்கூர் உகிர்

வாய்ப்பறை அசாவும் ஒலிமுந்து கூகை

என்ற பாடல் எடுத்துக்காட்டுகிறது.

வளைந்த வாயினையுடைய கூகை, பகல், பொழுதிலும் கூவிக் கொண்டிருக்க, அரிய காவலமைந்த மதிலினையுடைய பகைவர் நாட்டு ஊர்களின் அழகு அழியுமாறு திருமாவளவன் போர் செய்தான் எனும் செய்தியை,

வளைவாய்க் கூகை நண்பகல் குழறவும்

அருங்கடி வரைப்பின் ஊர்கவின் அழிய (குறிஞ்சிப்பாட்டு, பா.22)

எனும் அடிகளின்வழி அறியமுடிகிறது.

கிளி விரட்டல்

மலையில் பயிர்கள் வளர்ந்து நெற்கதிர்கள் முற்றிக் காணப்பட்டது. அந்நெற்கதிர்களை உண்பதற்காக கிளிகள் வந்தன. அக்கிளிகளை கொடிச்சி விரட்டும் செய்தியை,

சாரற் புறத்த பெருங்குரற் சிறுதினைப்

போமர் மழைக்கண் கொடிச்சி கடியவும்

சோலைச் சிறுகிளி யன்னும் நாட

ஆரிருள் பெருகி வரால்

கோட்டுமா வழங்கும் காட்டக நெறியே (அகம்.282)

எனும் பாடல் எடுத்தியம்புகிறது. கிளிகள் கதிர்களை கொய்வதற்கு வரும்போது கொடிச்சியானவள் குளிர்ந்த கண்கள் குவியும்படி அக்கிளிகளை விரட்டுகிறாள்.

. . . . வரையகச் சிறுதினைச்

செவ்வாய் பாசினம் கடீஇயர் கொடிச்சி

அவ்வாய்த் தட்டையொடு (ஐங்குறுநூறு, பா.883)

இப்பாடலில் மலைப்பக்கத்தில் உள்ள தினைக் கதிர்களைக் கிளிகள் கவர்ந்துச் செல்ல வரும் போது அக்கிளிகளை கொடிச்சி விரட்டிய நிகழ்வினை அறியமுடிகிறது.

தெய்வம் பலி பெறல்

தலைவி தலைவனை நினைத்து வருந்திய காரணத்தினால் தலைவிக்கு பசலை நோய் உண்டாகிறது. தலைவியின் பசலை நோயினைப் போக்க முருகனுக்குப் பலி கொடுத்தால் நோய் நீங்கிவிடும் என்று தெய்வ நம்பிக்கைக் கொண்டு வாழ்ந்துள்ளனர்.

தலைவிக்கு வந்துள்ள பசலை நோயைப் போக்குவதற்காக கடவுளுக்கு ஆட்டுக்குட்டியை பலியிட்டுள்ள செய்தியை,

தளிர்ஏர் மேனித் தொல் கவின்அழிய

பலிபெறு கடவுட் பேணி கலிசிறந்து (அகம்.382)

எனும் அடிகளின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

பலவகையான புண்ணியம் பொருள்களைக் கொண்டு ஆட்டின் சிறிய குட்டியைக் கொன்று பலியிட்டனர் என்பதை,

சிறிமறி கொன்று . . . .

வணங்கினை கொடுத்தி ஆயின் அணங்கிய

விண்தோய் மாமலைச் சிலம்பன்

ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே (குறுந்தொகை, பா.59)

எனும் குறுந்தொகை அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

சந்தன மரம்

மலையில் வாழ்க்கை நடத்துபவர்கள் குறவர்கள். அவர்கள் சமைப்பதற்கு சந்தன மரக்கட்டைகளை விறகாகப் பயன்படுத்தியுள்ளனர். காய்ந்த மரக்கட்டைகளைக் கொண்டு அடுப்பு எரிக்கும்பொழுது அதன் நறுமணம் மலையெங்கும் பரவி இருந்தமையை,

குன்றக் குறவன் சார்ந்த நறும்புகை

தேங்கமழ் சிலம்பின் வரையகங் கமழும் (அகம்.88)

எனும் பாடல்வழி அறியமுடிகிறது.

குறத்தி மாட்டிய வறல் கடைக்கொள்ளி

சாந்த ஆதலின் அம்புகை அயலது (ஐங்குறுநூறு, பா.298)

மலைவாழ் மக்கள் சந்தன விறகால் எரியூட்டி சமைத்து உண்ட செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது.

திருமணம் முறை

திருமணமானது மக்களால் நடத்தப்படும் சடங்கு முறையாகும். மலையில் உள்ள வேங்கை மலர்கள் மலரக்கூடிய மாதத்தில் திருமணம் நடத்தலாம் என்று முடிவு செய்து வாழ்ந்துள்ளமையை,

விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை (அகம்.298)

என்று அடிகளின்வழி அறியமுடிகிறது. மலர்களைக் கொண்டு பருவத்தை மதித்து குறிஞ்சிநில மக்கள் வாழ்ந்துள்ள செய்தியை,

புனவேங்கைத் தாது உறைக்கும் பொன்னறை முன்றில்

நனவிற் புணர்ச்சி நடக்குமாம் அன்றோ? (ஐங்குறுநூறு, பா.301)

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது. வேங்கை மலர்கள் பூக்கும் பொழுது திருமண நிகழ்வு நடந்துள்ள செய்தியை அறிந்து கொள்ளமுடிகிறது.

பெண் கேட்டல்

திருமணமானது மக்களால் நடத்தப்படும் சடங்கு முறையாகும். மணமகன் வீட்டார் பெண் வீட்டாரிடம் பெண் கேட்டுச் செல்லும் வழக்கம் இருந்துள்ளது. உறவினர்கள் ஊர்க்காரர்கள் அனைவரும் திருமணம் பற்றி பேசி தலைவன் தலைவிக்குத் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் இருந்தது. இதனை,

கொடிச்சி கூந்தல் போலத் தோகை

அஞ்சிறை விரிக்கும் பெருங்கல் வெற்பன்

வந்தனன் எதிர்த்தனர் கொடையே (அகம்.302)

எனும் அடிகள் உணர்த்துகிறது. தலைவன் தலைவியை மணம் பேசுவதற்கு அனுப்புகிறான். தலைவியின் சுற்றத்தாரும் திருமணத்திற்கு இசைவு அளித்தச் செய்தியை தலைவிக்குத் தோழி கூறுவதாக அமைந்துள்ளது.

கானவர்கள் அவர்களின் மகனுக்கு பெண் கேட்டு செல்வார்கள் என்பதை,

அம்மா வாழி தோழி நம்மூர்

நிரத்திலங் கருவிய நெடுமலை நாடன்

இரந்து குறையுறா அன்பெயரின்

என்ன வதுகொல் நம் இன்னுயிர் நிலையே (நற்றிணை, பா.67)

எனும் பாடலின் மூலம் பெண் கேட்டு போய் பெண்ணைப் பிடித்தால் பெண் வீட்டில் ஆஹக்கு கொடுக்க முடியாது என்றால் அவர்கள் வருத்தத்துடன் வீடு திரும்புவார்கள். மீண்டும் அவர்கள் பெண் கேட்டு அவர்களுக்கு தொல்லை கொடுப்பதால் பெண் வீட்டில் ஒத்துக் கொள்வார்கள் என்பதை இப்பாடல் விளக்குகிறது.

வதுவைச் சடங்கு

குறிஞ்சிநில மக்களின் வாழ்வியலில் ஒன்று வதுவைச் சடங்கு. களவுக் காலத்தில் பிறர் அறியா வண்ணம் தலைவி கூந்தலில் மலரணிந்தாள். பிறகு எல்லோரும் கண்டு மகிழும் வண்ணம் வதுவை சடங்கில் தலைவியினுடைய கூந்தலில் மலர் அணிவித்து மகிழ்ந்த நிகழ்வை,

எரிமருள் வேங்கை இருந்த தோகை

இழையணி மடந்தையின் தோன்றும்நாட

இனிது செய்தனையால் நுந்தை வாழியர்

நல்மனை வதுவை அயர இவள்

பின் இருங் கூந்தல் மலர் அணிதோயே (அகம்.22)

எனும் அடி உணர்த்துகிறது. திருமணச் சடங்கில் மணமகள் மணமகளுக்குக் கூந்தலில் மலரணிதல், சிலம்பணிதல், சிலம்பு கழித்தல் போன்ற வழக்கங்கள் இருந்தமையை அறியமுடிகிறது.

தலைவன் தலைவிக்கு நொச்சிப் பூவினைக் கொடுத்தான் என்பதை,

கூடுதல் வேட்கையான் குறிபார்த்துக்குரல் நொச்சிப்

பாடு ஓர்க்கும் செவியோடு (கலித்தொகை, பா91)

என்ற பாடலின்வழி அறிந்துக் கொள்ளலாம்.

குறவர்கள் தேன் எடுத்தல்

மலைநாட்டில் தேனானது மலிந்து இருக்கும். அங்கு தேன் கூடுதல் அதிகமாக இருப்பதால் அத்தேனை எடுத்து உண்டு வந்தார்கள். அத்தேனானது மிகவும் சுவை உடையதாகவும் கண்ணுக்கு குளிர்ச்சி உடையதாகவும் இருப்பதால் குறவர்கள் தேனை உண்டு வந்தார்கள் என்பதை,

சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழம்

இருங்கல் விடாளை வீழ்ந்தென வெற்பிற்

பெருந்தேன் இறாஅல் கீறும் நாடன் (ஐங்குறுநூறு, பா.259)

எனும் அடிகளின்வழி அறியமுடிகிறது. மலை உச்சியில் உள்ள மரங்களில் தேன் கூடுகள் காணப்படும். அம்மரங்களில் ஏறி தேனை எடுத்து உண்டும் மற்றவர்களுக்கு கொடுத்தும் வாழ்ந்து வந்துள்ளார்கள். இதனை,

சாந்தில் தொடுத்த தீம்தேன் போல (ஐங்குறுநூறு, பா.259)

எனும் அடியில் சந்தன மரங்களில் உயர்ந்து இருக்கும். அம்மரங்களில் உச்சியில் தேன் வைத்து கூடுகள் கட்டி இருக்கும். அக்கூடுகளை களைத்து தேன் எடுத்து உண்டு வந்தார்கள் குறவர்கள் என்பதை அறியமுடிகிறது.

தேன்மலை பகுதியிலுள்ள உயர்ந்த மரங்களில் கூடுக்கட்டி இருக்கும் தேன் கூடானது பல தேனீக்கள் கட்டியுள்ளதை,

கருவிரன் மந்திக் கல்லா வன்பறழ்

அருவரைத் தீந்தேன் னெழுப்பி யயல (குறுந்தொகை, பா.354)

துருகொழு நெடுஞ்சிமைப் பாயும் நாடன்

இரவின் வருத லறியான்

வரும்வரு மென்ப தோழி யாயே (அகம்.118)

எனும் பாடல் உணர்த்துகிறது.

குறிஞ்சிநில மக்கள் மரங்களில் ஏறி அக்கூடுகளில் உள்ள தேனீக்களை அனைத்தையும் விரட்டி தேன் எடுப்பார்கள் என்பதை,

வரன் ஊர்மதியம் வரைசேரின் அவ்வரை

தேனின் இறால் என ஏணி இழைத்திருக்கும்

கான் அகல் நாடன் (கலித்தொகை, பா.28)

எனும் கலித்தொகை பாடலின் மூலம் அறியமுடிகிறது.

அறுவடைச் செய்தல்

அருவி நீர் மழையைக் கொண்டு பயிர்கள் நட்டு வந்தார்கள். பயிர்கள் வளர்ந்து நெற்கதிர்கள் முற்றி இருந்தன. முற்றிய பிறகு அதை அவர்கள் அறுவடை செய்வார்கள். அறுவடைச் செய்வதற்கு அங்குள்ள பல பேர் சேர்ந்து கதிர்களை அறுத்து ஓர் இடத்தில் கொண்டு வந்து ஒன்று சேர்த்து வைத்து விடுவார்கள். பின்பு நெல்லை தனியாக எடுத்த விடுவார்கள். அறுவடை செய்வது அவர்களின் தொழிலாக இருந்தன என்பதை,

குன்றக் குறவன் காதல் மடமகள்

மென்றோள் கொடிச்சியைப் பெறந்கரிது தில்ல

பைம்புநப் படுகிளி யாப்பலன்

பன்புல மயக்கத்து விளைந்த திணையே (அகம்.338)

இப்பாடலில் குன்றத்தில் இருப்பவர்கள் நெற்கதிர்களை கொத்தவரும் கிளிகளுக்கு கொடுப்பதற்கு முன்பு நெற்கதிர்களை அக்குறவர்கள் அறுவடை செய்துவிட வேண்டுமென்று அக்கதிர்களை அறுவடை செய்து விடுவார்கள். அறுவடை செய்யும் போது அங்குள்ள மக்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து செய்தார்கள்.

தொடங்கு நிலைப் பறவை உடங்கு குரல் கவரும்

தோடிடம் கோடாய் கிளர்ந்து

நீடினை விளைமோ வழிய திணையே (ஐங்குறுநூறு, பா.216)

எனும் பாடலில் கிளிகள் முதலான பறவைகள் முற்றிய கதிர்களைக் கவர்ந்து செல்லும் முன் கதிர்கள் தலைச்சாய்ந்து விழுவதால் அம்மக்கள் அறுவடை செய்து விடுகிறார்கள் என்பதை அறியமுடிகிறது.

குன்றம் காத்தல்

சங்க கால மன்னர்க்குரிய மாபெரும் கடமைகளுள் ஒன்று குடிக்காத்தல். மன்னரின் ஆட்சிமுறை செங்கோண்மை பெற்றிருந்தால் மட்டும் நாட்டு மக்கள் வாழ்வு செம்மையான முறையில் அமையும். அந்த வகையில் குறிஞ்சி நிலத் தலைவன் மாரிக் காலத்திலும் வீரக் கழலை அணிந்து ஒள்ளிய வாள்தோளில் நனைந்து குன்றத்தைக் காத்து நின்றான். அவ்வாறு நிற்கும் செயல் மன்னர்தம் குடியில் காக்கும் மரபோடு ஒத்து காணப்படுகின்றார்.

மாரிக் குன்றத்துக் காப்பான் அன்னன்

காவலின் நனைந்து தொடலை ஒள்வாள்

பாசி சூழ்ந்து பெருங்கழல்

தன்பனி வைகிய வரிக்கச் சின்னே (அகம்.202)

என்னும் பாடலின் மூலம் மழைக் காலத்தில் குளம் கரையுடையாமல் பாதுகாத்து நிற்கும் காப்பாளனைப் போன்று குன்றத்தைக் காக்க வேண்டும்.

சிறுகோட்டுப் பெருங்குன்று காவலன் போல (ஐங்குறுநூறு, பா.218)

என்னும் பாடல் அடி மூலம் குன்றுகளை உடைத்து வந்து விடும் தண்ணீரை தடுத்து பாதுகாத்து நின்றார்கள் என்பதை அறியமுடிகிறது.

குறிஞ்சி நில மக்களின் இயற்கை

மலைச்சாரலில் உள்ள பலாமரங்கள் அம்மரங்களில் காய்கள், கொத்தாக காய்க்கப்பட்டு இருந்தது. பலாக் காய்கள் சில நாட்கள் கழித்து படித்தவுடன் பெருமலையில் பறையடுக்கில் வீழ்ந்து கிடந்தது. இதன் மணமும் அதிகமான தேன் வீடு கட்டியிருந்தன. பலாப்பழமும் தேனும் மலைநாட்டின் வளத்தை விளக்குகிறது.

சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழம்

இருங்கல் விடரனை வீழ்ந்தென வெற்பிற்

பெருந்தேன் இறா அல்கறும் நாடன் (அகம்.32)

எனும் அடி வாயிலாக அறியமுடிகிறது. மலைநாட்டின் பெரிய தோள்களும், பலா மரங்களும் நிறைந்து காணப்படடன. இவை இரண்டையும் குறவர்கள் பொருளாகவும் உணவாகவும் பயன்படுத்தினார்கள் என்று கூறப்படுகின்றனர்.

வேரல் வேலிவேர்க்கோட் பலவின்

நாரல் நாட (நற்றிணை, பா.210)

எனும் பாடலின் இயற்கையான வளர்ந்த மூலங்கிலையே சேவியாக அமைத்து குலைகளை உடைய பல மரங்கள் பாதுகாக்கப்பட்டன.

குன்றக் குறவன் புல்வேய் குரம்பை

மன்றாடு இளமழை மறைக்கும் (ஐங்குறுநூறு, பா.227)

மலையிலே வார்கின்ற குறவனுடைய புல்வேய்ந்த சீறிய குடிசையை வானத்திலே எப்பொழுதும் அசைந்து கொண்டிருக்கின்ற மேகங்கள் மறைக்கும் என்பதை அறியமுடிகின்றது.

குன்றக் குறவன் சார்ந்த நறும்புகை

தேம்கமழ் சிலம்பின் வரையகம் கமழும் (ஐங்குறுநூறு, பா.168)

என்ற பாடலில் மலையில் வாழும் குறவன் புகைக்கின்ற சந்தனத்தின் நல்ல புகை தேன்மணம் கமழும் மலை முழுவதம் நறுமணம் வீசம் இலைகள் குறிஞ்சி நிலத்தின் இயற்கைத் தோற்றத்தைக் காட்டுகின்றன.

முடிவுரை

அன்றாட செயற்பாடுகள், பழக்கங்கள், பொருள், உளவியல் தேவைகள், பொழுதுபோக்குகள், உறவாடல்கள், வேலை குடும்ப சுழற்சிகள் என வாழ்க்கையின் நாளாந்த வாழ்வியல் அம்சங்களை அன்றாடல் வாழ்வியல் குறிக்கின்றது. பொருளாதாரம், சூழமைவு, தனிமனித நிலைகளைக் கடந்து அன்றாடம் ஒவ்வொரு மனிதனும் செய்யும் செய்பாடுகள் ஆகும்.

அகநானூறு: குறிஞ்சிநில மக்களின் வாழ்வியல் என்னும் இக்கட்டுரையில் குறிஞ்சி நில மக்களின் அணிகலன்கள், கழங்கிட்டுப் பார்த்தல், அவர்களின் விருந்தோம்பல் பண்புகள், அம்மக்களின் உடைகள், அவர்களின் வழிபாடு, மழை வருவதற்கான அறிகுறி, நம்பிக்கை, திருமண முறைகள், முருக வழிபாடு, பல்லி சொல் கேட்டல் போன்றவற்றையும், ஆந்தை அலறல், கிளி விரட்டல், தெய்வம் பலி பெறல் ஆகியவற்றையும், சந்த மரங்கள் முதலியவையும், பெண் கேட்டல், வதுவைச் சடங்கு, குறவர் தேன்

எடுத்தல் முறைகளையும், அறுவடை செய்தல், குன்றம் காத்தல், குறிஞ்சி நில மக்களின் இயற்கை போன்றவை இக்கடடுரையில் கூறப்பட்டுள்ளது.

துணைநூற் பட்டியல்

இளம்பூரணர் (உ.ஆ.). தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2005.

செயபால், இரா. (உ.ஆ.). அகநானூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, முதற்பதிப்பு, 2004.

தட்சிணாமூர்த்தி, அ. (உ.ஆ.). ஐங்குறுநூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

நாகராசன், வி. (உ.ஆ.). குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, மு.ப., 2004.

நாற்கவிராசர், நம்பி அகப்பொருள், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, மு.ப., 1995.

பரிமேலழகர், திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப., 2002.

பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ.). நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

மோகன், இரா. (உ.ஆ.). திருமுருகாற்றுப்படை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, மு.ப., 2004.

ருக்மணி, இரா. (உ.ஆ.). பட்டினப்பாலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, மு.ப., 2009.

விசுவநாதன், அ. (உ.ஆ.). கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, மு.ப., 2004.

வேங்கடசாமி, ந.மு. (உ.ஆ.). சிலப்பதிகாரம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை, மு.ப., 1994.

References

Ilampooranar (Ed.). Tholkappiyam, Saratha Pathippagam, Chennai, First Edition, 2005.

Jeyapal, R. (Ed.). Akananooru (Moolamum Uraiyum), New Century Book House (P) Ltd., Chennai, First Edition, 2004.

Dakshinamoorthy, A. (Ed.). Ingurunooru, New Century Book House (P) Ltd., Chennai.

Nagarasan, V. (Ed.). Kurunthogai, New Century Book House (P) Ltd., Chennai, First Edition, 2004.

Narkavirasa, Nambi Agaporul, Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam Limited, Chennai, First Edition, 1995.

Parimelalagar, Thirukkural, Saratha Pathippagam, Chennai, First Edition, 2002.

Balasubramanian, Ku.Ve. (Ed.). Natrinai, New Century Book House (P) Ltd., Chennai.

Mohan, R. (Ed.). Thirumurugatrupadai, New Century Book House (P) Ltd., Chennai, First Edition, 2004.

Rukmani, R. (Ed.). Pattinapalai, New Century Book House (P) Ltd., Chennai, First Edition, 2009.

Visvanathan, A. (Ed.). Kalithogai, New Century Book House (P) Ltd., Chennai, First Edition, 2004.

Venkatasamy, N.M. (Ed.). Silappathikaram, Thirunelveli Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam Ltd., Chennai, First Edition, 1994.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com